விஜயபாரதம்
27.08.2020 மலர் - 1, இதழ் - 144 VIJAYABHARATHAM DAILY
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று)

# வணக்கம்

## இயற்கை வழிபாடு

பர்யாவரன் கதிவிதி மற்றும் இந்து ஆன்மீக சேவை அறக்கட்டளை (HSSF) இணைந்து வருகின்ற 30.08.2020 ஞாயிற்றுக்கிழமை நேரம் காலை 10:00 முதல் 11:00 வரை இயற்கை வழிபாடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பிரக்ருதி வந்தனா (இயற்கை வழிபாட்டினை) நாம் நமது வீட்டில் செய்வதுடன் பலரையும் அவரவர் வீடுகளில் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

நமது வீட்டில் உள்ள மரம் அல்லது தொட்டியில் உள்ள செடிக்கு குடும்பத்துடன் வழிபாடு செய்ய வேண்டும்.

இந்த நிகழ்ச்சியை நமது சர்சங்கசாலக் பரமபூஜனிய மோகன் ஜீ பாகவத் அவர்கள் 30.08.2020 காலை 10 மணிக்கு நிகழச்சியை துவக்கி வைக்கிறார்கள்.

அதன் நேரடி ஒளிபரப்பை www.fb.com/rss.paryavaransanrakshan/live என்ற இணைப்பில் பார்க்கலாம். மேலும் விஜயபாரதம் youtube மற்றும் facebook பக்கத்திலும் நேரலையாக ஒளிபரப்பப்படுகிறது. 'பிரக்ருதி வந்தனா' செய்த பிறகு sankalp.paryavaransanrakshan.org இல் சான்றிதழ் பெற விண்ணப்பித்து கிரீன் ஸ்டார் சான்றிதழைப் பெறுங்கள்.



*நேரலையில் காண விஜயபாரதம் Youtube, Fackbook பக்கம்/Vijayabharatham Weekly*

# பரதன் பதில்

*உதயநிதி ஸ்டாலின் மகள் விநாயகர் சிலையுடன் படம் வெளியீட்டு உள்ளாரே அது பற்றி?*

**மெயிலில் மோகன், சென்னை**

அதற்கு அவர் பதில். எனக்கோ என் மனைவிக்கோ கடவுள் நம்பிக்கை இல்லை. ஆனால் என் அம்மா கடவுள் நம்பிக்கை உள்ளவர். அவர் கும்பிட்ட சிலையே அது.

இதனை அவர் தேர்தல் பிரசாரத்தில் எனக்கும் என் மனைவிக்கும் கடவுள் நம்பிக்கை இல்லை என்று சொல்ல தயாரா?

# வெளிநாட்டில் தொடரும் லவ்ஜிகாத்

சென்னை ராயபுரம் தொழிலதிபர் ஒருவரின் மகள் லண்டனில் மருத்துவக்கல்வி பயின்று வந்த நிலையில் பங்களாதேஷ் நாட்டை சேர்ந்த முஸ்லீம் அமைச்சர் மகனின் தூண்டுதலால் கடத்தப்பட்டுள்ளார்.

மேலும் அந்த மாணவியை மிரட்டி முஸ்லீம் மதத்துக்கு மாற்றி நிப்ஸ் என்ற இளைஞனுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூலையில் நிகழ்ந்த இந்த சம்பத்தை தொடர்ந்து பெண்ணின் தந்தை மத்திய உள்துறை அமைச்சகத்தில் புகார் அளித்ததை தொடர்ந்து உள்துறை அமைச்சகம் இந்த வழக்கை தேசிய புலனாய்வு முகாமைக்கு மாற்றப்பட்டது.

புலனாய்வு விசாரணையில் நபிஸ் என்ற நபரும் அவனது நண்பனும் சேர்ந்து இந்த கடத்தலை செய்ததும் அப்பெண்ணை மிரட்டி திருமணம் செய்த அந்த நபரை இந்தியாவுக்கு அழைத்து வந்து விசாரிக்க இந்திய வெளியுறவுத்துறை முடிவு செய்துள்ளது. இந்த கடத்தல்' மிரட்டல், கல்யாணம் சம்பவத்தில் தொடர்புடைய நபீஸ்க்கு சர்ச்சைக்குரிய மத போதகர் ஜாகிர் நாயக் தொடர்பு இருப்பதாகவும் தகவல் தெரிவிக்கிறது. இந்தியாவில் மதமாற்றம் லவ் ஜிகாத் என்று இருந்த கும்பல்கள் தற்போது வெளிநாட்டில் கல்வி பயிலும் இந்திய மாணவிகளையும் குறிவைத்துள்ளது புலனாகிறது



# ஆச்சி மசாலா / சக்தி மசாலா

தற்போது பல கடைகளில் கிறித்தவக் கும்பல்கள் சக்தி மசாலாவுக்கு ஆர்டர் தராமல் இருக்க ஏராளமான 'அன்பளிப்பு' வழங்கி, மதமாற்றத்தை ஊக்குவிக்கும் ஆச்சி மசாலா சரக்குகளை மட்டுமே அடுக்கி வைக்கவும் செய்து, சக்தி மசாலாவை முடக்க முனைகின்றனர். ஆச்சி மசாலா கிருஸ்தவர்கள் மட்டும் அல்லாமல் அவர்கள் மதமாற்றத்திற்கு ஆதரவாக செயல்பட்டும், அப்படி செயல்படும் நபர்களுக்கு ஆதரவாகவும் இருந்து வருகிறது.

எக்காரணம் கொண்டும் "ஆச்சி" தயாரிப்புகளை வாங்காமல், கடைக்காரரிடமும் சக்தி மசாலாத் தயாரிப்புகளை, பழையபடி, விற்பனைக்கு வைக்க வலியுறுத்துவோம்.

மறவாதீர்கள், சக்தி மசாலாத் தயாரிப்புகள் அனைத்தும், மாற்றுத் திறனாளிகளை பணியில் அமர்த்தி உற்பத்தி செய்யப்படுகிறது. அதனை ஆதரிப்பதன் மூலம் பல மாற்றுத் திறனாளிகளின் இல்லங்களில் தீபம் எரிய உதவுகிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



சக்தி மசாலா உரிமையாளர்களின் சமுதாயப் பொறுப்பினைப் போற்றி, அவர்களை ஊக்குவிப்பது நமது சமூகக் கடமை.


சுமார் 70 வருடமாக தேச நலனை கருத்தில் கொண்டு வெளிவந்து கொண்டு இருக்கும் விஜயபாரதம் இதழை பெற இன்றே சந்தாதாரராக சேருவீர்.

ஒரு வருட சந்தா : 500

இரண்டு வருட சந்தா : 950

ஐந்து வருட சந்தா : 2,250



தொடர்புக்கு 044 - 2642 0870

# அவர்கள் மொழியிலேயே பதில்

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாணவராக இருந்த போது வாரந்தோறும் திருப்பரங்குன்றம் சென்று முருகனைத் தரிசித்து வருவார். ஒருமுறை அவர் திருப்பரங்குன்றம் செல்லும்போது பாதையில் ஒரு கல்லின் மீது நின்றுக் கொண்டு ஒரு கிறிஸ்தவ பாதிரி பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்.

''ஏ பாவிகளே! இதோ நான் மிதித்துக் கொண்டிருக்கும் இந்தக் கல்லுக்கும் அதோ வீதியில் குவிந்து கிடைக்கிறதே அந்த கற்குவியலுக்கும் நீங்கள் கோயிலில் தெய்வமென்று கும்பிடுகீறர்களே?'' அதுக்கும் 'என்ன வித்தியாசம்' என்று ஏளனமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அதைக் கேட்டு கோபம் அடைந்த தேவர், பாதிரியிடம், ''உங்களுக்கு அம்மா இருக்கிறார்களா?'' என்றார்.

''இருக்கிறார்'' என்றார் பாதிரியார்.

''உங்களுக்கு திருமணம் ஆச்சா?''

''ஆகிவிட்டது''.

''உங்களுக்கு உடன்பிறந்த சகோதரிகள் உண்டா?'' உண்டு.இதைக்கேட்ட தேவர், ''உங்கள் தாயும் பெண் தான். உங்கள் தங்கையும் பெண் தான். உங்கள் மனைவியும் பெண் தான். மூவரும் பெண்கள் தான் என்பதற்காக, அவர்களிடம் ஒரேவிதமாக உங்களால் பழக முடியுமா?'' என்றார்.

-பாதிரி தடுமாறினார்.

''நின்றுகொண்டிருக்கும் கல், வீதியில் குவிந்து கிடக்கும் கற்கள், ஆலயத்தில் இருக்கும் விக்கிரஹம் மூன்றும் கற்களாக இருப்பினும் அவைகள் இருக்கும் இடத்தைப் பொறுத்து, அர்த்தங்களும் அனுஷ்டிக்கும் முறைகளும் மாறும்'' என்றார் தேவர்.



கூடியிருந்த மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தபோது பாதிரி அவமானத்தால் நடையைக் கட்டினார்.